http://www.maalaimalar.com
Regd. No. CB/026/2024-2026 RNI. No. 30446/77

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

கோவை 24-7-2024 (புதன்கிழமை) 8 பக்கம் ₹ 5 ★★★
COIMBATORE 24-7-2024 (WEDNESDAY) 8 PAGES ₹ 5

மலர் 47 இதழ் 222
VOL: 47 ISSUE: 222

## இ.எஸ்.ஐ–பி.எப். சார்பில்

# பங்குதாரர் குறைதீர்வு முகாம்

## 29-ந்தேதி நடக்கிறது

கோவை, ஜூலை.24–

தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் (இ.எஸ்.ஐ.சி) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (இ.பி.எப்.ஓ) ஆகியவற்றின் சார்பில் நிதி ஆப்கே நிகட் 2.0 திட்டத்தின்கீழ் கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் பங்குதாரர்களுக்கான குறைதீர்வுமுகாம் வருகிற 29–ந்தேதி காலை 10 மணி முதல் தொடங்கி நடைபெற உள்ளது.

அதன்படி கோவை மாவட்டத்துக்கு சிந்தாமணிபுதூர், பாப்பம்பட்டி பிரிவு செல்வராஜ் மில்ஸ், திருப்பூர் மாவட்டத்துக்கு உடுமலை, பாலப்பம்பட்டி விக்டஸ் டையிங், ஈரோடு மாவட்டத்துக்கு பெருந்துறை தோப்பு பாளையம் கொங்கு பொறியியல் கல்லூரி, நீலகிரி மாவட்டத்துக்கு ஊட்டி சேரிங்கிராஸ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஆகிய பகுதிகளில் குறைதீர்வு முகாம் நடைபெற உள்ளது.

எனவே குறைகள் உள்ள பங்குதாரர்கள் மேற்கண்ட நிகழ்ச்சியில் பங்கேற்று பயன் பெறலாம்.

மேலும் இ.எஸ்.ஐ தொடர்பான விளக்கங்களுக்கு benefitsrokovai@esic.nic.in மற்றும் தொலைபேசி எண்: 0422–2362329 எண்ணிலும், இ.பி.எப்.ஓ தொடர்பான விளக்கங்களுக்கு ro.co–imbatore@epfindia.gov.in இணைய முகவரியையும் தொடர்பு கொள்ளலாமென கோவை சார்மண்டல தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் செய்திக்குறிப்பின்வாயிலாக தெரிவித்து உள்ளது.

Edited and Published by **C.SENTHILKUMAR** for Malar Publications Ltd., and Printed by **J.P.VIJAYARAJ** at Thanthi press, 766, Avinashi Road, Coimbatore-641 018.